708275

No. of Printed Pages : 6

**6211**

பதிவு எண் | | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

**(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)**

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக்கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்ல கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிகோடிடுவதற்கும் பயன்படுத்தவேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

**I.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றினுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளுக்கு** மிகாது விடை எழுதுக. **3x4=12**

**1.** இசைத்தமிழ் என்பது யாது? முற்காலத்தும், இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல்வகைகள் யாவை?

**2.** உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு. வி.க. கூறுவன யாவை?

**3.** கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு வோர்ட்ஸ்வொர்த், கோல்ரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை?

**4.** நம் முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

**5.** அக்காலத்துக் கல்வியே சிறந்ததாக இளவழகனார் கருதுதற்குக் காரணங்கள் யாவை ?

[ திருப்புக

**II.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றினுக்கு** மட்டும் விடை எழுதுக. ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளுக்கு** மிகாது விடை எழுதுக. **3x4=12**

6. விரலுடைய இளைஞர்க்கும் மாடு உவமையாகக் கூறப்பட்டதனை விளக்குக.

7. ''செல்வம் நிலைபேறு உடையதன்று'' என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது?

8. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை?

9. சோழர் காலத்துச் சிற்பிகளின் திறமையைப் புலப்படுத்துக.

10. 'ஆ' தெய்வத்தன்மையுடையது என்பதனை எடுத்துக்காட்டுக.

**III.** பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றினுக்கு** மட்டும் **இருபது வரிகளுக்கு** மிகாது விடை எழுதுக. **1x6=6**

11. இராமலிங்க அடிகளாரின் சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாக நுந்தம் பாடப்பகுதியில் வரும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

12. 'நீதிகூறும் போதும் நயம்படக் கூறியவர், திருவள்ளுவர்'என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

**IV.** பின்வரும் வினாக்கள் **ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு** மிகாமல் விடை எழுதுக. **2x10=20**

13. 'மண்' அல்லது 'கிழிசல்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் எழுதுக.

**அல்லது**

'பழிக்குப்பழி' அல்லது 'ஒவ்வொரு கல்லாய்' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் நிகழ்ச்சியினை நாடகமாக எழுதுக.

14. 'வேலி' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையில் நும்மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

**அல்லது**

புதல்வனால் கைவிடப்பட்டு முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள, தந்தையொருவர் சொல்வதுபோல நும் சொந்த நடையில் ஒரு கட்டுரை எழுதுக.

**அல்லது**

பால்வண்ணம்பிள்ளை பிடிவாத குணத்தை விட்டுச் சிறந்த குடும்பத் தலைவனாக மாறியதை உம் கற்பனைத் திறத்தால் ஒரு கதை எழுதுக.

**V. 15.** பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

வாணிகர்தம் முகவரியை வரைகின்ற
    பலகையிலே ஆங்கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த செந்தமிழால் வரைக, என
    அன்னவர்க்குச் சொல்ல வேண்டும்!
ஆணிவிற்போன் முதலாக அணிவிற்போன்
    ஈறாக அனைவர் போக்கும்
நாணமற்ற தல்லாமல் நற்றமிழின்
    நலம் காக்கும் செய்கையாமோ?
உண்டு தரு விடுதியினைக்கிளப் எனவேண்
    டும்போலும் உயர்ந்த பட்டுத்
துணிக்கடைக்குச் சில்க்ஷாப் எனும் பலகை
    தொங்குவதால் சிறப்பு போலும்!
மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை!
    தோப்பில் நிழலா இல்லை!
தணப்பரிதாம் துன்பமிது! தமிழகத்தின்
    தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை.

-பாவேந்தர் பாரதிதாசன்.

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளன.

VI. பின்வரும் தொடர்களில் **எவையேனும் மூன்றினுக்கு** மட்டும் தமிழாக்கம் எழுதுக. 3x2=6

16. A little stream will drive a light mill.

17. Truth always prevails.

18. Work more. talk less.

19. Experience is the mother of wisdom.

20. Idleness is the root cause of all illness.

21. Honesty is the best policy.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து (பத்துவரிகளில்) எழுதுக. 1x4=4

(அ) ''முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்''

(ஆ) ''பருவத்தே பயிர்செய்''

(இ) ''நுணலும் தன் வாயால் கெடும்''

**அல்லது**

''ஒற்றுமை'' அல்லது ''கல்வி'' என்னும் தலைப்பில் சொந்தப் படைப்பாக கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்கு குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x2=10

**VI** மற்றும் **VII**-இல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காதுகேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் **16** முதல் **22** வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தினுக்கு** மட்டும் ஏற்ற விடையை எழுதுக.

இயல், இசை, நாடகம் என மூவகையில் அமையும் முத்தமிழில் கடைசியாக அமைவது நாடகம். நாடகத்தைப் ''பாமர மக்களின் பல்கலைக்கழகம்'' என்பர். நாடகவேந்தர் டி.கே. சண்முகம் அவர்கள் பார்த்தும் கேட்டும் மகிழத்தக்கது நாடகம் என்பர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தைக் கூத்து என்றும் நடிகர்களைக் கூத்தாடி என்றும் அழைத்தனர். சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களுள் கூத்தராற்றுப்படையும் ஒன்றாகும். மேலும் திருக்குறள் ''கூத்தாட்டவைக் குழாத்தற்றே'' என நாடகம் நடைபெறும் இடத்தை கூத்தாட்டவை என்றே குறிப்பிடுகிறது.

நாடக அமைப்பு முறையை முதற்கண் விரிவாகச் சுட்டும் நூல் சிலப்பதிகாரமாகும். நாடகத்தை நடிக்க மட்டும் படிக்க மட்டும், நடிக்க படிக்க இரண்டிற்கும் என மூவகையாகப் பகுப்பர். மேலும் நாடகத்தின் கதையடிப்படையில் நாடகம் இன்பியல், துன்பியல் என இரண்டு வகைப்படும்.

தமிழ்நாட்டில் கிடைத்த முதல் நாடகம் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம். இது வடமொழியில் அமைந்தது. இராசராச சோழனைப்பற்றி 'இராஜராஜ விஜயம்' என்னும் நாடகம் தஞ்சைப் பெரியகோயிலில் நடந்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன.

**வினாக்கள்** :

**16.** 'பாமர மக்களின் பல்கலைக்கழகம்' எது?

**17.** இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தையும் நடிகர்களையும் எவ்வாறு அழைத்தனர்?

**18.** நாடகம் நடைபெறும் இடத்தைத் திருக்குறள் எவ்வாறு குறிப்பிடுகிறது?

**19.** நாடக அமைப்பு முறையை முதற்கண் விரிவாகச் சுட்டும் நூல் எது?

**20.** நாடகத்தின் கதையடிப்படையில் நாடகம் எத்தனை வகைப்படும்?

**21.** தமிழ்நாட்டில் கிடைத்த முதல் நாடக நூலின் பெயரினைக் கூறு.

**22.** இராசராச சோழனைப் பற்றித் தஞ்சைப் பெரியகோயிலில் நடந்த நாடகத்தின் பெயர் என்ன?

[ திருப்புக

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

**23.** ஒன்றோ அல்லது இரண்டோ தருக.
(தொடரிலுள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக)

**24.** உணவு பொருள் தரகுறைவாக விற்கப்படுவதால் நச்சு காளான் உண்டாகி செரிமானம் குறைகிறது.
(தேவையான இடங்களில் வல்லினமெய் இட்டு எழுதுக)

**25.** நீரோச் சோறோ எது கிடைத்தாலும் உண்டு செல்வேன்.
(தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லினமெய் நீக்கி எழுதுக)

**26.** டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.
(ஆங்கில சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

**27.** இளந்தேங்காய், முற்றிய தேங்காய் இரண்டும் மரத்தில் இருந்து விழுந்தன.
(மரபுப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

**28.** கொடுத்த சேதியைக் கோர்வையாய்ப் பேசு :
(கொச்சை சொற்களை நீக்கி எழுதுக)

**29.** உரவு - உறவு அல்லது துனி - துணி :
(பொருள் வேறுபாட்டை உணர்ந்து அதனைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக)

**30.** பாலிய விவாஹம் சர்க்காரால் தடை செய்யப்பட்டு விட்டது.
(வட சொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

**31.** அலுவலகத்தில் மேனேஜரிடம் ரெக்கார்ட் வைக்கப்பட்டது.
(அலுவலகக் கலைச் சொற்களைத் தமிழில் எழுதுக)

**32.** மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் எழுதியுள்ள தமிழியற் கட்டுரைகள் என்ற நூல் எளிமையும் ஆழமும் கொண்டு விளங்குகிறது.
(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக)

-oOo-